Date:29.11.2019.
OS 215/2010
DW1: கோகுல்ராவ் (Cross continuation)
Address:

வாதி தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

என் அப்பா போட்டுள்ள எதிர்வழக்குரையில் பாரா 5ல் சர்வே எண்.179/4ல் என் தாத்தா எத்திராஜுலுநாயுடுவின் அண்ணன் கோவிந்தராஜ்நாயுடுக்கு சொந்தமானது என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான், அந்த சொத்துக் குறித்து என்னுடைய உயிலில் வந்துள்ளது. கோவிந்தராஜ்நாயுடுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எல்லாம் அவர் மனைவி பூலோகம்மாள் பெயருக்கு பட்டா தாக்கல் ஆகியிருக்கும் என்று சொன்னால் சரியல்ல, ஏனென்றால் சில சொத்துக்கள் விற்றுப் போயிருக்கலாம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பூலோகம்மாள் பெயரில் தாக்கல் ஆகியிருக்கிற பட்டாவில் சர்வே எண்.179/4 என்ற எண் இல்லை என்று சொன்னால் அவசியம் இல்லை, விட்டு போயிருக்கலாம். இதே ஆவணத்தை நான் என் ஆவணங்களுடனும் தாக்கல் செய்துள்ளேன் அது பி.வா.சா.ஆ.10 ஆகும். பூலோகம்மாள் எனக்கு உயில் எழுதி வைத்துள்ளதால் அதில் உள்ள சொத்துக்கள் என் பெயருக்கு மாறியபிறகு பட்டா மாற்றியிருக்கிறதா என்று சொன்னால் என் அப்பா பெயரில் பட்டா இருப்பதால் மாற்றவில்லை. சர்வே எண்.179/4 என்ற எண்ணானது கோவிந்தராஜ்நாயுடுக்கு சொந்தமானது என்று என் அப்பா பொய்யாக சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல, தவறு, சர்வே லேண்ட் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். பொதுவாக அண்ணன், தம்பிகளுக்கு சொத்து இருக்கும் போது அவரவர்களுக்குரிய வசதிக்கு ஏற்றவாறு வாய்மொழியாக நிலங்களை மாற்றும் வழக்கும் உள்ளது என்று சொன்னால் இருக்கலாம், அது மாதிரி எங்கள் வீட்டில் இல்லை. என் அப்பா பெயரில் தாக்கல் ஆகி உள்ள சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் ராகவல் நாயுடு உடைய வாரிசுகள் என்ற முறையில் நாகேஷ்வரராவ் என்பவர் பெயரில் பட்டா மாறியிருக்கலாம் என்று சொன்னால் மாறியிருக்கிறது. நாகேஷ்வரராவ் வாங்கிய நிலங்களும் இருக்கிறது. என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா எண்.437 தாக்கல் ஆகிஉள்ள சர்வே எண்ணில் உள்ள சொத்துக்கள் என் தந்தையார் கிரையம் வாங்கிய சொத்துக்களா என்றால் சரிதான், அந்த சொத்துக்களுடன் வேறு சொத்துக்களும் இருக்கிறது.

பட்டா எண்.437 வா.சா.ஆ.11 ஆகும். வாதிகளின் தந்தையார் எத்திராஜ ுலுநாயுடுக்கு பாத்தியப்பட்ட தாவாவில் சொல்லியுள்ள சர்வே எண்.275/12, 275/13, 275/14, 282/17,282/5,312/14, 179/4, 281/5,254/8 ஐயிட்டம் எண்.2ல் கண்ட சொத்து மேற்படி பட்டாவில் இருக்கிறதா என்றால் இருக்கிறது, ஆனால் எத்திராஜ ுலுநாயுடுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல கூட்டு குடும்ப சொத்தாகும். கூட்டு குடும்பமாக இருக்கும் பட்சத்தில் வாதிகளின் மற்றொரு சகோதரரான இறந்து போன மதனகோபால் பெயரிலும் கூட்டா பட்டா தாக்கல் ஆகியிருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல, ஏனென்றால் என் சித்தப்பா மதனகோபாலுக்கு இரயில்வேயில் வேலை வாங்கிக் கொடுத்ததால் மேற்படி நிலங்களை பார்க்கசொல்லி என் அப்பா நாகேஷ்வரராவிடம் என் தாத்தா சொல்லியுள்ளதால், நாகேஷ்வரராவ் தான் மூத்தவர் ஆதலால் அவர் பெயரில் உள்ளது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என் பாட்டி மூலம் எனக்கு தெரியும். வழக்குச் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்துடன் என்னால் சொல்லப்பட்ட கட்டுக்கதை என்று சொன்னாலும், யூடிஆர்பட்டா பதிவேற்றும் நேரத்தில் என் தந்தையார் பெயரில் பட்டா தாக்கல் ஆகியிருக்கிறது என்று சொன்னால் தவறு, வாதிகளால் அவர்களுடைய பூர்வீகச் சொத்தை விற்பதை மறைப்பதற்காக போடப்பட்ட பொய் வழக்கு. என் சித்தப்பா ஏற்கனவே 1985லேயே இறந்து விட்டார் என்பதால் 2005 Amendment Act படி நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவான 20/12/2004 தேதிக்குள் எத்திராஜ ுலுநாயுடுவின் ஆண் வாரிசுகளான மதனகோபால் மற்றும் நாகேஷ்வரராவ் ஆகியோர்கள் யாரும் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் தவறு. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் விடுதலை பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். விடுதலை பத்திரம் பி.வா.சா.ஆ.41 ஆவணத்தில் ஐயிட்டம் 2 மற்றும் 3குறித்த சொத்துக்கள் இருக்கிறதா என்றால் இல்லை. ஐயிட்டம் 1 சொத்தை பொறுத்த வரையில் அது எத்திராஜுலுநாயுடுவை பொறுத்த வரை அது தனிப்பட்ட சொத்து அதில் மதனகோபால் வாரிசுகள் அவர்களுடைய உரிமையை விடுதலை தான் செய்கிறார்கள் என்றும், அது பாகபத்திரம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல, பாதி பாக பாத்தியத்தை விடுதலை செய்வதாக (metes and bounds) எல்லை வரையறை மதனகோபாலின் வாரிசுள் விடுதலை செய்வதாக உள்ளது, ஐயிட்டம் எண்.1ஐ பொறுத்து அவர்கள் அனைத்து பாகத்தையும் விடுதலை செய்வதாக உள்ளது. பாகப்பத்திரம் என்றால் ஒரு சொத்து ஆயிரம் சதுரடி என்றால் ஐநூறு ஐநூறு என்று தான் பிரிக்கும் பட்சத்தில் தான் அது பாகப்பத்திரம், உரிமையை விட்டுக் கொடுத்தால் அது விடுதலை பத்திரம், ஆதலால் பி.வா.சா.ஆ.41 ஆவணமானது மதனகோபால் ஏ செடியூல் சொத்து

போய்விட்டது, நாகேஷ்வரராவ் என்பவருக்கு பி செடியூல் சொத்து போய்விட்டது என்று இல்லை ஆதலால் அது விடுதலை பத்திரம் மட்டுமே பாகப்பிரிவினை பத்திரம் அல்ல என்று சொன்னால் தவறு, சகல பாத்தியத்தையும் விட்டுக் கொடுப்பதாக தான் போட்டுள்ளது, சொத்து விவரத்திலும் போட்டுள்ளது. மொத்த சொத்தின் மதிப்பு ரூ.1,00,000/- பாதி பாத்திய மதிப்பு ரூ.50000/ என்று உள்ளது. பி.வா.சா.ஆ.41 மற்றும் பி.வா.சா.ஆ.42 ஆன இரண்டு ஆவணங்களையும் மதனகோபால் மறைவிற்கு பிறகு அவர் குடும்பத்தாருக்கு பணம் கொடுத்து கடன் பத்திரம் எழுதி மதனகோபால் வாரிசுகளை நிர்பந்தம் படுத்தி 4வது பிரதிவாதியின் திருமணத்திற்கு பணம் உதவி செய்ய வேண்டும் என்றால் மேற்படி ஆவணங்களில் கையெழுத்து செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வாங்கிய ஆவணங்கள் என்றால் தவறு, பாகபாத்தியத்தை விட்டு கொடுத்து விட்டார்கள், செலவுகளுக்கும் நாங்கள் பணம் கொடுத்து விட்டோம். என் அப்பா எழுதிய எதிலுரையில் பாரா 6ல் The defendant further sumbit that as per share of Madanagopal is concerned his legal heirs defendants 2 to 4 have released their rights in the suit property in favour of this defendant under a registered release deed dated 22.08.2002. This defendant has discharges the amount and saved the property from auction by spending huge amount the Plaintiffs were given decent marriage by spending huge amount என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் பிறகு நாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். என் தகப்பானார் எதிலுரை போடும் போது என் அப்பா தவறுதலாக எதிலுரை தாக்கல் செய்து விட்டார், அதனால் நாங்கள் சரியாக எதிலுரையை தாக்கல் செய்ய வேண்டும் என்ற வாசகம் உள்ளதா என்றால் பி.வா.சா.5முதல் பி.வா.சா.7 உள்ள பிரதிவாதிகளில் ஒருவரான எனக்கு உரிமை உள்ளதால் கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ.41 ஆவணத்தில் விடுதலை பத்திரம் இல்லை, அது பாகம் பத்திரம் தான் என்று அதில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் வழக்கறிஞராக எப்போது படிக்க போனேன் என்றால் 2012ம் ஆண்டு ஆகும். எப்போது வழக்கறிஞராக முடித்தேன் என்றால் 2016ம் ஆண்டு முடித்தேன். நான் எங்கு படித்தேன் என்றால் எஸ்வியுனிவர்சிட்டி, திருப்பதியில் படித்தேன். கூடுதல் எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞரிடம் என்னால் கொடுக்கப்பட்டதா அல்லது என் அம்மாவால் கொடுக்கப்பட்டதா என்றால் நான் தான் தகவல் கொடுத்தேன். அப்போது இந்த வழக்கிற்கான வழக்கறிஞர் யார் என்றால் திரு.ஆர்.அன்பழகன் ஆவார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.47 ஆவணத்தில் சர்வே எண்.220/6, 222/5 என்றால்

சரியா என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் தாவா ஐயிட்டம் பியில் கண்டுள்ளதா என்றால் இல்லை. ஆதலால் பி.வா.சா.ஆ.47 ஆவணம் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று சொன்னால் தவறு, பூர்வீகச் சொத்தை என் தாத்தா (வாதியின் அப்பா) விற்று இருக்கிறார் என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்திருக்கிறேன். பி.வா.சா.ஆ.47 ஆவணத்தில் எத்திராஜுலுநாயுடு என்பவர் 1947ம் ஆண்டு என்னுடைய சுய சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்தாக கூறப்பட்டுள்ளது என்றால் இருக்கிறது, ஆனால் தவறு. ஒரு கர்த்தா கூட்டு குடும்ப சொத்தாக இருக்கும் பட்சத்தில் குடும்ப கடனை அடைப்பதற்காகவோ, அல்லது குடும்ப விருத்திக்காகவோ விற்கலாம் என்று சொன்னால் தவறு, கர்த்தாகவாக இருந்தாலும் சட்ட சம்பந்தமான பிரச்சினை இருந்தால் விற்கலாம். பி.வா.சா.ஆ.47 ஆவணத்தை எழுதிக் கொடுத்த வருடம் 1976, நான் பிறந்தது 1979 என்பதால் அந்த வருடத்தில் என்ன அவசிய தேவை என்பதை குறித்து எனக்கு எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் வாய்ப்பில்லை என் பாட்டி மூலம் தெரிந்து கொண்டேன். மேற்படி தாவா சொத்துக்கள் கோவிந்தராஜனுக்கும், எத்திராஜ ுலுக்கும் பிரிந்து விட்டது, அது எத்திராஜுலு நாயுடுவின் தனிப்பட்ட சொத்து தான் என்று சொன்னால் ஆவணங்கள் பார்க்காததால் என்னால் சொல்லமுடியவில்லை. வாதிகள் அவர்கள் தந்தையின் தனிப்பட்ட சொத்து தான் என்பதால் அவர்கள் ஐந்தில் ஒரு பாகம் கோருகிறார்கள் என்றால் தவறு தாவா ஐயிட்டம் 1 சொத்தில் சொந்த செலவில் அடமானம் மீட்டுள்ளார், தாவா ஐயிட்டம் 2மற்றும் 3ல் என் அப்பாவின் சொந்த சொத்தும், வழிமுறை சொத்தும் உள்ளது. நாங்கள் மொத்தமாக வாதிகளுக்கு சொத்து வரக்கூடாது என்பதால் தான் யூடிஆர் பதிவேற்றும் செய்யும் நாளில் என் அப்பா நாகேஷ்வரராவ் பெயரில் பட்டா மாற்றி கொண்டோம் என்று சொன்னாலும், அதற்குரிய ஆவணம் தான் பி.வா.சா.ஆ.45 ஆகும் என்றால் தவறு, பி.வா.சா.ஆ.45 ஆவணம் தான் இன்று வாதியின் தரப்பில் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.45 ஆவணத்தில் நாகேஷ்வரராவ் பெயர் மட்டும் தான் உள்ளது, மற்ற வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பெயர்கள் இல்லை என்று சொன்னால் சரிதான், கூட்டு குடும்ப சொத்தும் உள்ளது, என் அப்பா வாங்கிய சொத்தும் உள்ளது, மற்றவர்களின் பெயர்கள் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. தாவா சொத்தை முழுமையாக அடைய வேண்டும் என்ற காரணத்திற்காக யூடிஆர் நடைமுறைக்கு வந்த சமயத்தில் என் அப்பா நாகேஷ்வரராவ் பெயரில் மட்டும் பட்டா மாற்றிக் கொண்டார் என்று சொன்னால் தவறு வாதிகள் தான் ஆவணங்களை மாற்றி சர்வே எண்.196/1 ல் 188 செண்டு மற்றும் 246/3ஐயும் விற்று விட்டார்கள் இது சம்பந்தமாக என் தகப்பனாரும் எப்ஐஆர் அவர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்கதிகள் என் அப்பா தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கண்டுள்ளதா என்றால் இல்லை, என் பதிலுரையில் கண்டுள்ளது, அதற்கான

ஆவணம் உள்ளது. தாவா ஐயிட்டம் 3 வீட்டுமனையின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் ஞாபகம் இல்லை, ஆவணம் உள்ளது. அந்த ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் வை.ராகவல்நாயுடு பெயரில் உள்ளது. வை.ராகவல்நாயுடு மறைவிற்கு பிறகு கோவிந்தராஜூம் மற்றும் எத்திராஜூலுநாயுடும் ஊத்துக்காடு கிராமத்தில் உள்ள வீட்டு மனை சொத்தை பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அதற்கான ஆவணங்கள் பார்க்கவில்லை. விடுதலைக்கு முன் வாய்மொழியாக பிரித்துக் கொள்ளும் வழக்கம் உள்ளது என்றால் எங்கள் வீட்டில் நான் பார்த்ததில்லை. தாவா ஐயிட்டம் 3ல் உள்ள சொத்து இராகவல்நாயுடு மகன்களான கோவிந்தராஜ் நாயுடுக்கும், எத்திராஜூலுநாயுடுக்கும் பாகம் பிரித்து அது எத்திராஜூலுநாயுடுக்கு ஒதுக்கிய பாகம் சொத்து என்று சொன்னால் தெரியாது. எத்திராஜூலுநாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்பதால் தாவா 3வது ஐயிட்ட சொத்துக்கு வாதிகள் ஐந்தில் ஒரு பாகம் கோர முடியும் என்று சொன்னால் தவறு. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் சர்வே எண்.227/1 என்ற எண் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி சொத்திற்கு பூலோகம்மாள் பெயரில் ஏதேனும் பத்திரம் உள்ளதா என்றால் தெரியாது, இருக்கலாம். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.910 சோமசுந்தரம் மகன் நடராஜன் பெயரில் பட்டா தாக்கல் ஆகி இருக்கிறது அதில் சர்வே எண்.227/1 என்று உள்ளதால் அது நடராஜன் சொத்து என்று சொன்னால் நடராஜன் எங்கள் குடும்பத்திற்கு சம்பந்தப்பட்டவர் அல்ல, தற்போது பட்டா உள்ளது. அந்த பட்டா வா.சா.ஆ.12 ஆகும். பூலோகம்மாள் அந்த உயிலை எழுதும் சமயத்தில் அவருக்கு 80 வயது என்பதால் அவர் பெயரில் என்ன என்ன சொத்துக்கள் இருக்கிறது என்று அவருக்கு தெரியாது என்றும், என் அப்பா 1வது பிரதிவாதி, சார்பதிவகத்திற்கு அழைத்து போய் அவர் பெயரில் எழுதி வாங்கி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல, உண்மை தன்மையை நான் நிறுபித்து விட்டேன். பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் தடையின்மை பிரமாணம், சம்மத பிரமாணத்தையும் 5ம்பிரதிவாதிஎன்அம்மாசாந்தகுமாரி தான் போட்டார் என்று சொன்னால் சரிதான், ஆனால் வாரிசு இல்லை என்பதால் போட்டார். தாவா ஐயிட்டம் 1முதல் 3 சொத்துக்கள் எத்திராஜூலுநாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்பதால் வாதிகளுக்கு ஐந்தில் ஒரு பாகம் கோர உரிமையுள்ளது என்று சொன்னால் தவறு, நான் அதை மறுக்கிறேன். பி.வா.சா.ஆ.1முதல் பி.வா.சா.ஆ.58 வரை உள்ள ஆவணங்கள் தாவாவிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்று சொன்னால் தவறு, வாதிகளும் 2முதல் 4பிரதிவாதிகளும் ஒன்று சேர்ந்து கொண்டு பொய்யான தகவல்களை கூறியதால் இத்தனை ஆவணங்களை போட்டுள்ளேன்.

மறு விசாரணை-இல்லை.